Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

அற்புதத்தின் மாலை

பழனியில்
நாள் : மார்ச் 4
(சனிக்கிழமை)
இடம் : ஸ்ரீ ராம லலிதா மஹால்,
ராஜேந்திரா ரோடு,
ஆர்.சி.சர்ச் (எதிர்புறம்) பழனி.
நேரம்
மாலை 5.00 மணி முதல்
இரவு 9.00 மணி வரை



தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா

தூத்துக்குடியில்
நாள் : மார்ச் 5
(ஞாயிற்றுகிழமை)
இடம் : ராஜ் மஹால்,
பழைய பேருந்து நிலையம் மற்றும்
ஹோட்டல் ராஜ் அருகில், தூத்துக்குடி.
நேரம்
மாலை 5.00 மணி முதல்
இரவு 9.00 மணி வரை

தொடர்புக்கு : 94888 45627, 80987 42638 & 81482 37037

திருநெல்வேலியில்
குடும்பங்களுக்கான ஆலோசனை மற்றும் தனி ஜெபம்
மார்ச் 11
சனிக்கிழமை
இடம் : செல்வி மஹால்
காளிமார்க் பேருந்து நிறுத்தம் அருகில்,
முருகன் குறிச்சி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி.
நேரம் : காலை 9.30 மணி முதல் 2.00 மணி வரை
தேவ செய்தி: Dr. ஆனந்த ஸ்திரா
தொடர்புக்கு : 94888 45627, 80987 42638 & 81482 37037

நாகர்கோவிலில்
உங்கள் விடுதலையின் நாள்



மார்ச் 11
சனிக்கிழமை
இடம் : அபிஷேக் காம்ப்ளக்ஸ்,
மெத்தை கடை மாடி,
W.C.C. ரோடு, நாகர்கோவில்.
நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை
தேவ செய்தி & ஜெபம் : Rev.Dr. A. ஜாஷ்வா
தொடர்புக்கு : 94888 45627, 82203 17472

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:9 இதழ்:3 மார்ச் 2023 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL: 9 ISSUE NO : 3 March 2023 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-





# மரணப்பிடியிலிருந்து விடுவித்து அற்புதமாய் ஜீவனைக் கொடுத்த கர்த்தர்

என் மகன் பெயர் அபிஷேக், 2004-ம் ஆண்டு என் மகன் 2-ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது டெங்கு காய்ச்சல் வந்தது. அதற்காக 3 மருத்துவமனையில் மகனை அட்மிட் செய்து தொடர்ந்து சிகிச்சை அளித்து வந்தோம். மருத்துவர்கள் இனி உயிர் பிழைப்பது கடினம் என கூறிவிட்டனர். அந்த நிலையில் திருவனந்தபுரத்தில் உள்ள மருத்துவமனைக்கு மகனை தூக்கிக்கொண்டு சென்றோம். அங்கு 15 நாள் வென்டிலேட்டரில் வைத்திருந்து அதன்பிறகும் மகனிடத்தில் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை.

மீண்டும் நாகர்கோவிலில் உள்ள மருத்துவமனைக்கு மகனை தூக்கிக்கொண்டு வந்து அட்மிட் செய்துவிட்டோம். அங்கும் உயிர் போய்விடும் என சொல்லிவிட்டார்கள். அந்த நேரத்தில் என் சகோதரி அன்பரின் ஊழியத்திற்கு போன் செய்து **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் விஷயத்தைச் சொன்னார்கள். சகோதரர் உடனே பாரத்துடன் ஜெபித்தார்கள், **"இயேசப்பா இந்த மகனின் உயிர் உங்கள் கையில் இருக்கிறது. உடனே அவனை திருப்பி அனுப்புங்கள். இவன் உமக்காக பயன்படனும்" என சொன்னார்கள். சகோதரர் ஜெபித்துக்கொண்டிருந்தப்பொழுது மகனுடைய உடலில் அசைவு காணப்பட்டது என நர்ஸ் சொன்னார்கள்.**

அதன்படியே மகன் பரிபூரண சுகம் பெற்றான். வீட்டிற்கு அழைத்து வந்தோம். இருப்பினும் மருத்துவர்கள் மகனைக் குறித்து, இவன் உயிர் பிழைத்தாலும் ஒரு மனநிலை பாதிக்கப்பட்ட மகனாக இருப்பான் என சொல்லி அனுப்பினார்கள். காய்ச்சலுக்கு முன் மகனுடைய கையெழுத்து நன்றாக இருந்தது. இந்த காய்ச்சலுக்குப்பிறகு அவனுடைய கையெழுத்து சரியில்லை, படிக்கும் தன்மை எல்லாமே மந்தமாக காணப்பட்டது.

இருப்பினும் கர்த்தர் மகனுக்கு உயிர் கொடுத்ததை சாட்சியாக சொல்லும்படி 2005-ம் வருடம் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்து நான் சாட்சி சொன்னேன். அப்பொழுது சகோதரர் என் மகனுக்காக ஜெபித்துவிட்டு இவனை ஒரு ஊழியக்காரனாய் நான் பார்க்கிறேன் என சொல்லி ஜெபித்து அனுப்பினார்கள். அதைக் கேட்ட நான், **என் மகன் ஊழியக்காரனாய் மாறினவுடன் நான் வந்து சாட்சி சொல்வேன் என பொருத்தனை செய்தேன்.**

படிப்பில் மந்தமாய் இருந்த மகனை கர்த்தர் பெலப்படுத்தினார். இன்று என் மகன் Theology முடித்து ஒரு சபையில் பாஸ்டராக ஊழியம் செய்து வருகிறான். மரண கட்டிலிருந்து விடுவித்து, இம்மட்டும் அற்புதமாய் மகனை பாதுகாத்து வருகிற கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். பாரத்துடன் ஜெபித்த சகோதரர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.

**- திருமதி. சாந்தி கலா, கன்னியாகுமரி.**



## Rev. Dr. A. ஜாஷ்வா அவர்கள் ஜெபத்தினால் மகத்துவ தேவன் செய்த அற்புதங்கள்! தேவ நாமம் மகிமைக்காக!

### இருதய பெலவீனத்தை நீக்கி அற்புத சுகம் கொடுத்த கர்த்தர்!



என் பெயர் மஞ்சுளா. 14 வருடமாக இருதய பெலவீனத்துடன் வாழ்ந்து வந்தேன். எனக்கு திடீரென இருதயத்துடிப்பு அதிகமாகும்போது மூச்சுவிட சிரமப்படுவேன். உடனே மருத்துவமனைக்கு கொண்டு செல்வார்கள். மருத்துவர்கள் என்னை பரிசோதித்துப் பார்த்துவிட்டு உடனே தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்து விடுவார்கள். இதனால் நானும், என் குடும்பத்தினரும் அதிக கஷ்டங்களை அனுபவித்து வந்தோம்.

**கடந்த 2020-ம் ஆண்டு மார்ச் 14-ம் தேதி ஈரோட்டில் நடைபெற்ற கூட்டத்திற்கு நான் வந்து Rev.Dr.A. ஜாஷ்வா அவர்களிடம் எனக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். பாஸ்டர் எனக்காக ஜெபித்துவிட்டு இயேசப்பா நிச்சயமாக சுகம் தருவார் என சொல்லி அனுப்பினார்கள்.**

**மார்ச் 16-ம் தேதி அன்று இரவு நான் தூங்கிக்கொண்டு இருந்தப்பொழுது ஈரோடு கூட்டத்தில் பாஸ்டர் பாடிய பாடல் சத்தம் என் காதில் கேட்டுக்கொண்டே இருந்தது. இரவு ஒன்றரை மணி போல என் இருதயத்தில் யாரோ கை வைத்தது போல இருந்தது. அந்த நிமிடத்தில் எனக்கு இருந்த இருதய பெலவீனம் நீங்கியதை உணர்ந்து உடனே என் கணவரிடம் சொன்னேன். அன்றிலிருந்து நான் நல்ல சுகத்துடன் இருக்கிறேன். என்னை தொட்டு சுகமாக்கிய கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். பாரத்துடன் ஜெபித்த பாஸ்டர் அவர்களுக்கும் என் நன்றியை தெரிவிக்கிறேன்.**

**- சகோதரி மஞ்சுளா, நாமக்கல்.**

### கட்டியை மறைய செய்த கர்த்தர்!



என் பெயர் முருகேசன். 2005-ம் ஆண்டு ஊட்டி **YWCA** வளாகத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு நான் வந்திருந்தேன். **Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் ஜெப வேளையில் என்னை பெயர் சொல்லி அழைத்து எனக்காக ஜெபித்தார்கள். அந்த நேரத்தில் எனக்கிருந்த வியாதியை கர்த்தர் சுகமாக்கினார்.**

அதன்பின் திருப்பூரில் நடைபெற்ற கூட்டத்திற்கும் நான் வந்திருந்தேன். என் **கழுத்தின் பின்பகுதியில் ஒரு கட்டி இருந்தது. கூட்டம் முடிந்து செல்லும்பொழுது ஜெப எண்ணெயை வாங்கிக்கொண்டு சென்று, விசுவாசத்துடன் என் கழுத்தின் பின்பகுதியிலிருந்த கட்டியில் தடவினேன். ஒரு சில நாட்களில் அந்த கட்டி மறைந்து போய்விட்டது. அற்புத சுகத்தைக் கொடுத்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.**

**- சகோ. முருகேசன், குன்னூர்.**

### பரிபூரண விடுதலையைத் தந்த கர்த்தர்!



என் பெயர் கிருஷ்ணவேனி. அன்பரின் ஊழிய பங்காளராக இருக்கிறேன். கடந்த மூன்று மாதங்களாக சரீர பெலவீனத்துடன் இருந்தேன். அத்துடன் கெட்ட கனவுகள், கருப்பான ஒரு உருவம் வந்துக்கொண்டே இருந்தது.

ஜனவரி மாதம் வேலூரில் கூட்டம் நடைபெறுவதை அறிந்து கூட்டத்திற்கு வந்தேன். ஜெப வேளையில் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் பொல்லாத சத்துருவினால் வருகிற போராட்டத்திலிருந்தும், கெட்ட கனவுகளிலிருந்தும் கர்த்தர் தாமே விடுதலை யாக்குகிறார் என சொன்னார்கள். **அந்த நேரத்தில் என்னையும் கர்த்தர் தாமே சத்துருவின் போராட்டத்திலிருந்து விடுதலையாக்கினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**

**- சகோதரி கிருஷ்ணவேனி, வேலூர்.**


HAPPY
70th
Birthday
DR.ANANDA STIRA
தாயின் கருவில் தெரிந்தெடுத்து
தரணியில் வாழ தயை செய்து
சுகம் பெலன் ஜீவன் தந்து
இலட்சங்களுக்கு ஆசீர்வாதமாய் வைத்தீரே
தேவா, உம் கிருபையை
என்னச் சொல்லி துதிப்போம்!
பரலோகத்தை ஆத்துமாக்களினால் நிரப்ப
அன்பின் நற்செய்தி பரப்ப
அன்பரின் ஊழியம்!
ஏழைகளின் கண்ணீரை துடைக்க
அறப்பணிகள் மூலம் தொண்டு செய்ய
S.J.Saves Trust
Dr.ஆனந்த ஸ்திரா அவர்களின் சுகத்திற்காக,
நீடிய ஆயுளுக்காக,
ஊழியத்தில் இன்னும் வல்லமையாக பயன்பட
தொடர்ந்து ஜெபியுங்கள்!

# அன்பரின் ஊழியம்

மலர்:9 ◆ மார்ச் 2023 ◆ இதழ் 3




## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான பங்காளர்களே!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உன்னத நாமத்தில் உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக் களை தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த இரண்டு மாதங்களும் நம்மை பத்திரமாய் பாதுகாத்து புதிய மாதத்தில் பிரவேசிப்ப தற்கு தயை செய்த கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். தொடர்ந்து நம்மையும், நம்முடைய சந்ததியையும் வழுவாதபடி காத்து, அவருடைய வருகை மட்டும் மாசற்றவர்களாகவும், பிழையற்றவர்களாகவும் நம்மை நிறுத்த கர்த்தர் வல்லவராய் இருக்கிறார். சோர்ந்து போகாதீர்கள்!

நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கிற இந்த உலகத்தில் கிறிஸ்துவின் பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு அனைத்தையும் ஒரு கற்பனை கதையாக நினைப்பவர்கள் பெருகி வருகிறார்கள். இயேசு கிறிஸ்து பிறந்தது நமக்காகவே! தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்! கிறிஸ்துவின் பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு அனைத்தும் பதிவு செய்யப்பட்ட உண்மைகள்!

இயேசுவின் பிறப்பை குறித்து மரியாளிடத் திலும், யோசேப்பிடத்திலும், மேய்ப்பர்களிடத்திலும் தெளிவாக பேசியவர்கள் பரிசுத்த தூதர்கள். அந்த பரிசுத்த தூதர்கள் உன்னதத்தில் பிதாவின் சமூகத்தை 24 மணிநேரமும் சேவித்துக் கொண்டிருக்கிறவர்கள்!

- **இயேசு ஞானஸ்நானம் பெறும்பொழுது தேவன் தாமே வானத்திலிருந்து "இவரே என் நேச குமாரன்" என்று கூறினார்.**
- **இயேசு கிறிஸ்து "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என யோவான்ஸ்நானன் சாட்சி பகர்ந்தார்.**
- **இயேசு கெத்சமெனே தோட்டத்தில் இரத்த வியர்வையோடு ஜெபிக்கும் பொழுது கர்த்தருடைய தூதன் அவரை பலப்படுத்தினார்.**
- **சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்த போதும், அவர் பரமேறியபொழுதும் தூதர்கள் சாட்சி சொன்னார்கள்.**

இயேசு மரித்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து, பரமபிதாவின் வலது பாரிசத்தில் இருப்பது நிச்சயம். அங்கிருந்து நம்மை நியாயந்தீர்க்க வரப்போகிறார் என்பதும் நிச்சயம். **நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான். அப்போஸ். 2:36**

இயேசுவின் சிலுவையின் பாடுகளை தியானிக்கிற மக்கள் பிசாசின் பிடியிலிருந்தும், கொடிய வியாதிகளிலிருந்தும் வித்தியாசமான உபதேசங்களி லிருந்தும் விடுதலை பெறுவதை நாம் பார்க்கிறோம் அல்லவா? **இயேசு சிலுவையில் அறையப்பட்டது உலகப் பிரகாரமாக பலவீனமானதாக காணப் பட்டாலும் உண்மையின்படி அது தேவனுடைய சித்தமும், பலமுமாய் இருக்கிறது.**

நம்முடைய பாவங்களுக்காகவே, நம் முடைய அருள்நாதர் இயேசு கிறிஸ்து சிலுவையில்


ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |

24 மணி நேர ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 94888 45627

காலை 9.30 மணி முதல் இரவு 7.00 மணிவரை ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 80987 42638

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

**இரத்தம் சிந்தினார். அந்த பரிசுத்த இரத்தத்தை பிதாவினிடத்தில் காண்பித்து நமக்காக பரிந்து பேசுகிறார். இயேசுவின் பரிசுத்த இரத்தம் இன்றும் வல்லமையுள்ளதாக இருக்கிறது.**

நம் ஆலயங்களில் பரிசுத்த திருவிருந்தை பெறும் பொழுதெல்லாம் இயேசுவின் பாடுகளையே நாம் நினைவுகூறுகிறோம். இயேசு உயிர்த்தெழுந்த நாளிலிருந்து சீஷர்கள் முதற்கொண்டு இந்நாள் வரைக்கும் லட்சக்கணக்கான மக்கள் அவரை விசுவாசித்து பரிசுத்த திருவிருந்தில் பங்குபெற்று ஆவிக்குரிய பலனை பெறுகிறார்கள். ஆகவே இந்த லெந்து நாட்களில் இயேசுவின் பாடுகளை வாசித்து தியானியுங்கள்.

**கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இந்த மாதம் 13ஆம் தேதி எங்கள் தந்தையின் 70வது பிறந்த நாளை ஜெபத்தோடு சிறப்பிக்க இருக்கிறோம். கர்த்தர் அவர்களுக்கு நல்ல சுகத்தையும் தீர்க்காயுசையும் தந்து, தொடர்ந்து அவர்களை வல்லமையாக கர்த்தர் பயன்படுத்த ஜெபியுங்கள்.**

- **அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தின் பராமரிப்பு பணிகள், Painting வேலைகள் அனைத்தையும் முடிப்பதற்கு கர்த்தர் இரங்கி, தேவைகளை சந்திக்கும்படி ஜெபியுங்கள்.**
- **பிப்ரவரி மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். பிரயாணங்களில் பாதுகாப்பைத் தந்தார். மார்ச் மாதம் பழனி, தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில், மற்றும் திருச்சியில் நடைபெறயிருக்கிற அனைத்து கூட்டங்களுக் காகவும் ஜெபியுங்கள். கூட்டங்களை நடத்து வதற்குரிய தேவைகள் சந்திக்கப்பட ஜெபிங்கள்.**
- **ஊழியத்தின் தேவைகள் மாதந்தோறும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. பத்திரிக் கை ஊழியம், டி.வி. ஊழியம் மற்றும் சுவிசேஷ கூட்டங்களை நடத்துவதற்கான தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். மறவாமல் தாங்குங்கள். ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்குரிய தெளிவான விபரங்கள் உள்ளே தரப்பட்டுள்ளது.**
- **சமூக வலைதளங்கள் (Ministry of Jesus) வாயிலாக வெளி வருகிற பாடல்கள், அனுதின அற்புதம் மற்றும் புதிய நிகழ்ச்சிகளை பாருங்கள். அனுதினஅற்புதம் இன்னும் புதிய மொழிகளில் வெளிவர, அந்தப் பணிக்குரிய நல்ல ஆட்கள் கிடைக்க ஜெபியுங்கள்.**
- **S.J.Saves Trust-ல் உள்ள பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள். S.J.S.T. மருத்துவமனைக்காக விசேஷமாக ஜெபியுங்கள். மருத்துவமனைக் குரிய தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள் தாங்குங்கள்!**
- **எங்கள் அனைவருடைய சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.**

உங்கள் அனைவருக்காகவும் நாங்கள் தொடர்ந்து ஜெபிக்கிறோம். கர்த்தர் உங்களை ஆசீர் வதித்து காப்பாராக!

## இம்மாத வாக்குத்தத்தம்

ஏசாயா 53:5

கொலோசெயர் 1:20

1யோவான் 5:11; எபிரெயர் 12:1

கிறிஸ்துவின் பணியில்

**Dr. ஜேன் ஜாஷ்வா**


# தனி ஜெபம் மற்றும் ஆலோசனை

மார்ச் 26 ஞாயிற்றுக் கிழமை

நேரம் : மாலை 4.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை

தனி ஜெபம் & ஆலோசனை வழங்குபவர்

**Dr. ஜேன் ஜாஷ்வா**

குடும்ப ஆலோசனைகள், படிப்பு, வேலை, எதிர்காலம் மற்றும் ஆவிக்குரிய ஆலோசனைகளை பெற விரும்புகிறவர்கள் இந்த நாளில் நேரில் வாருங்கள். உங்களுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்படும். உங்களுக்காக தனித்தனியாக ஜெபம் ஏறெடுக்கப்படும்.

கீழ்க்கண்ட இந்த எண்ணிற்கு தொடர்புக் கொண்டு முன்பதிவு செய்துப் பிறகு நேரில் வரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தொலைபேசி எண்கள் : 9488845627, 8098742638, 0431-2741925 (10am- 6pm)




## கன்னியாகுமரி மற்றும் சென்னை பகுதியிலுள்ள அன்பரின் ஊழியப் பங்காளர்கள் கவனத்திற்கு

நமது அன்பரின் ஊழியம் பிரதிநிதிகளாக கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் எனவே உங்கள் ஜெப வேண்டுதல்களை அவர்களிடம் கூறி ஜெபித்துக் கொள்ளலாம். மேலும், நமது ஊழிய விபரங்களையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**கன்னியாகுமரி : 82203 17472**
**சென்னை : 77081 53666**

## அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

நம்பிக்கை TELEVISION

**புதன்**
**மதியம் 12.00 – 12.30**

**வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு**
**இரவு 8.30 – 9.00**

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

**ARADANA TV**
**புதன், வியாழன், வெள்ளி**
**இரவு 7.00 – 7.30**

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

HARVEST TV கேரளம்
**சனி**
**இரவு 7.30 – 8.00**



# இரட்டிப்பான நன்மை

தேவ செய்தி : Rev.Dr.A. ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் பிரியமான பங்காளர்களையும், பத்திரிக்கை வாசகர்களையும் நம் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் அன்போடு வாழ்த்துகிறேன்! இந்த மாத வாக்குத்தத்தச்செய்தியின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். விசுவாசத்துடன் படியுங்கள். கர்த்தர் தம் வார்த்தையின்படியே உங்களை ஆசீர்வதிப்பார்.

**நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள்; இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன் - சகரியா 9: 12**

மேற்கூறிய இந்த வசனத்தை சகரியா தீர்க்கதரிசி இஸ்ரவேல் ஜனங்களுக்கு எழுதுகின்றார். ஏனென்றால் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்த பூமியை இழந்து பல இடங்களிலே சிதறடிக்கப்பட்டார்கள். கர்த்தர் கொடுத்திருந்த நிலத்தை, செழுமையை, தங்கள் அடையாளத்தை இழந்தபடியால் அந்த தேசத்தில் பிற இனத்தவர் குடியேறிவிட்டனர், பங்கு போட்டுக் கொண்டனர். அப்படிப்பட்ட ஒரு கால கட்டத்தில் தான் தீர்க்கதரிசி இந்த வார்த்தையை சொல்கிறார். சிறைபட்டு போய், வாக்குத்தத்த பூமியிலிருந்து ஒரு கைதிகளாக சென்றுவிட்டனர். இருப்பினும் **மீண்டும் நீங்கள் அரணுக்கு திரும்புங்கள். அவ்வாறு திரும்பும்பொழுது இழந்து போனதை எல்லாம் இரட்டைத்தனையாய் பெற்றுக்கொள்வீர்கள்** என்று கூறுகிறார்.

**உங்களுடைய நிலத்தை, செழிப்பை, அடையாளத்தை, மேன்மையை, தகுதியை என எல்லாவற்றையும் இரட்டைத்தனையாய் தருவேன் என்பது இந்த வார்த்தையின் ஆசீர்வாதம்.** அன்றைக்கு இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுக்கப்பட்ட இந்த வார்த்தை இன்றைக்கு உங்கள் ஒவ்வொருவருக்கும் சொல்லப்படுகின்ற ஒரு காரியமாக இருக்கிறது. இந்த வாக்குத்தத்த செய்தியை 3 பிரிவுகளாக பிரித்து நாம் தியானிப்பது நல்லது.

## 1. நம்பிக்கையுடைய சிறைகளே (Prisoners of hope)

இந்த வசனத்தின் ஆரம்பமே **"நம்பிக்கையுடைய சிறைகளே"** என சொல்லப்பட்டுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு சிறையில் வாழும் கைதிகளுக்கு சுவிசேஷம் சொல்வதற்கு ஒரு திறந்த வாசல் இருந்தது. அந்த நாட்களில் சிறைச்சாலையில் ஊழியம் செய்வதை பார்ப்பதற்கு எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. அப்படி நான் அங்குள்ள சூழ்நிலைகளை கவனிக்கும் பொழுது, அதில் சுதந்தரமாக சில கைதிகள் சுற்றுவார்கள். சிலரை வெளியே விடவேமாட்டார்கள் மிகுந்த கண் காணிப்பில், பாதுகாப்பில் அவர்களை வைத்திருப் பார்கள். அங்குள்ள கைதிகளிடத்தில் தனிப்பட்ட முறையில் பேசினோம் என்றால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தினால் சிறைக்கு வந்தேன் என்பார்கள். அதிலும் குறிப்பிட்டு சிலர் சொல்வார்கள் நான் **"கோபத்திலே யோசிக்காமல் ஒரு நிமிடத்தில் இந்த தவறை செய்தபடியால் சிறைக்கு வந்து விட்டேன்"** என்பார்கள். இப்படி சிறைப்பட்டு போனவர்களை தான் நாம் சிறை கைதிகள் என்று சொல்கிறோம். இப்படி சிறையில் இருக்கும் சில கைதிகளுக்கு விடுதலையாகிவிடுவோம் என்ற நம்பிக்கை இருக்கலாம். இன்னும் சிலர் எனக்கு விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையே இல்லை என எண்ணலாம்.

**அதுபோலத் தான் நீங்கள் பாவத்திலே விழும் பொழுது, அந்தகாரத்தில் நடக்கும் பொழுது, கர்த்தருக்கு விரோதமாக செயல்படும்பொழுது, துணிந்து தேவ சமூகத்தை குலைச்சலாக்கும் பொழுது நீங்கள் பிசாசின் ராஜ்யத்திலே சிறைக்கைதிகளாக சிக்கிக்கொள்கிறீர்கள்.** பிசாசின் ஆதிக்கத்திலே ஒரு கைதியாகி விடுகிறீர்கள். ஆவிக்குரிய பிரகாரமாக பார்க்கும் பொழுது பிசாசு மனுக்குலத்தை சிறைக் கைதிகளாக வைத்திருக்கிறதை நாம் பார்க்கிறோம். இந்த சகரியா புத்தகத்தில் இந்த வசனத்திற்கு முந்தைய வசனத்தை பார்த்தால் நாம் ஒரு காரியத்தை அறியலாம். **உனக்கு நான் செய்வதென்னவென்றால், தண்ணீரில்லாத குழியிலே அடைபட்டிருக்கிற உன்னுடையவர்களை நான் உன் உடன்படிக்கையின் இரத்தத்தினாலே விடுதலை பண்ணுவேன் - சகரியா 9: 11**

பிசாசின் ஆதிக்கத்தில் சிறைப்பட்டு போனவர்களுக்கு, தேவனுக்கு விரோதமான செயல்களை செய்கிறவர்களுக்கு, துணிந்து பாவத்தை செய்கிறவர்களுக்கு கர்த்தருடைய காரியத்தை அலட்சியப்படுத்துகிறவர்களுக்கு கர்த்தர் கொடுக்கின்ற ஒரு வார்த்தை தண்ணீர் இல்லாத குழி என்பதே. அதிலே அகப்பட்டு துன்புறுகிறவர்களை அவர் விடுதலை செய்கிறார். **இங்கு சிறைச்சாலை நீர் இல்லாத குழிக்கு ஒப்பிடப் பட்டிருக்கிறது.** யோசேப்பை குழியில் தூக்கி போட்டார்கள். அந்த குழியில் தண்ணீர் இல்லை.

கடைசியில் கைதியாகவே இஸ்மவேலரிடத்தில் சகோதரர்களால் விற்கப்பட்டான். அவர்கள் போத்திபாரின் அரண்மனையில் இவனை அடிமையாக விற்றுவிட்டார்கள். இப்படிப்பட்ட நீர் இல்லாத ஒரு குழி சிறைக்கு சமமாக ஒப்பிடப்படுகிறது என்றால் உங்களுடைய வாழ்க்கையில் தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை நீங்கள் செய்யும்பொழுது அதுவும் ஒரு சிறைதான். உங்களுக்கு சுதந்தரம் எதுவும் இருக்காது உங்களை கட்டுப்படுத்த அங்கே பிசாசு இருக்கிறான். அவனுடைய ஆதிக்கம் தான் அங்கு இருக்கிறது. அவனது கட்டுபாட்டிற்குள் நீங்கள் இருந்தால் அவனுக்கு அடிமையாக இருக்கிறீர்கள். இது தான் அதின் அர்த்தம். **எப்படி சிறைச்சாலையில் இருக்கின்றவன் அந்த சிறை அதிகாரிகளுக்கு கட்டுப்பட்டு இருக்க வேண்டுமோ? அதேபோல தேவனோடு ஐக்கியம் இல்லாமல் பிசாசின் கைதியாக இருக்கும் பொழுது அவனுக்கு கட்டுப்பட்ட வர்களாக இருக்க வேண்டும்.**

**பாவிகள் ஒருவகையில் சிறைக்கைதிகள், யாருடைய கைதிகள் பிசாசின் கைதிகள். இந்த கைதிகளுக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது.** அந்த நம்பிக்கை எப்படி இருக்கிறது. **அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து, ஜனங்களின்மேல் தெளித்து, இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான் - யாத். 24: 8** இது உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடு கூட உடன்படிக்கை பண்ணின இரத்தம். இது சிறைபட்டுப்போய் இருக்கிற உங்களை, பிசாசின் பிடியில், அடிமைத்தனத்தில் இருக்கிற உங்களை இந்த இரத்தம் விடுதலையாக்கும்.

**ஆவிக்குரிய சிறைக்கைதிகளுக்கு இங்கே ஒரு நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கை தான் உடன்படிக்கையின் இரத்தம், ஆட்டுக்குட்டியான வருடைய இரத்தம். அந்த இரத்தத்தினாலே விடுதலை இருக்கிறது.** அதனால் தான் தீர்க்கதரிசி அருமையாக அந்த வார்த்தையை நம்பிக்கையுடைய சிறைகளே என்று ஆரம்பிக்கின்றார். நம்மோடு அவர் செய்த உடன் படிக்கையால் ஒரு விடுதலை உண்டு.

அன்பான வாசகர்களே! இன்று நீங்கள் பிசாசுக்கு அடிமைப்பட்டு சிறைக் கைதிகளாக இருக்க லாம், கலங்காதீர்கள்! கர்த்தருடைய உடன் படிக்கையின் இரத்தத்தினால் உங்களுக்கு நிச்சயம் விடுதலை உண்டு.

## 2. அரணுக்கு திரும்புங்கள் (Return to the Stronghold)

தீர்க்கதரிசி அடுத்ததாக ஒரு காரியத்தை சொல் கிறார். **"அரணுக்கு திரும்புங்கள்"** அரண் என்றால் ஒரு பாதுகாப்பை குறிக்கிறது. பொதுவாக அரண்மனைக்குள் யாரும் எளிதாக உள்ளே போக முடியாது. அந்த அரண்மனையை சுற்றி ஒரு பாதுகாப்பு இருக்கும். அதேபோலத்தான் அரண் போன்ற பாதுகாப்பு உங்களுக்கு கிடைக்கிறது. அப்படி என்றால் **யார் நம்முடைய அரண்? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. 2சாமுவேல் 22:33** தேவன் எனக்குப் பலத்த அரணானவர்; என்று சொல்லப்பட்டிருக்கிறது. **சங்கீதம் 31:4; 43:2** வசனங்களை வாசிக்கும்பொழுது **"நீரே என்னுடைய அரண்"** என்று பார்க்கிறோம். அதேபோல **2சாமுவேல் 22:2; சங்கீதம் 18:2; 91:2; 71:3; 144:2** இந்த வசனங்களை வாசிக்கும்பொழுது **தேவன் என் கோட்டை** என்று அதிகாரப்பூர்வமாக சொல்லப் பட்டிருக்கிறது. **அவர் என் கோட்டை** என்று சொல்லும் பொழுது அவரே உங்களை சுற்றி கோட்டையாக இருப்பதால் ஒருவரும் உங்களை தொட முடியாது. இப்படிப்பட்ட அரணுக்கு நேராக நீங்கள் திரும்பும் பொழுது அங்கே ஒரு நம்பிக்கை வருகிறது. அவரே உங்களுக்கு நம்பிக்கையாக இருக்கிறார். **நாகூம் 1:7-ம்** வசனத்தில் **"கர்த்தர் நல்லவர், இக்கட்டுநாளிலே அரணான கோட்டை, தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்"** என்று தெளிவாக சொல்லப் பட்டுள்ளது. சில வங்கிகளில் **Strong Room** என்று எழுதப்பட்ட ஒரு பகுதியை பார்க்க கூடும். அதுதான் வங்கியின் லாக்கர் ரூம் ஆகும். அதிகாரப்பூர்வமான நபர்களை தவிர வேறு யாரும் அதற்குள் பிரவேசிக்க முடியாது. அதைப்போலவே **ஒரு பாதுகாப்பான அரணாக, கோட்டையாக கர்த்தர் நம்மை பாதுகாக்கிறார்.** ஆபத்துகளில், நோய்களில், எதிராளி யிடமிருந்து மற்றும் பல அழிவு காரியங்களிலிருந்து அவர் நம்மை அரணாக இருந்து பாதுகாப்பார். எதிராளிகளிட மிருந்து பாதுகாக்கிறார் என்பதற்கு உதாரணமாக சவுல் ஈட்டியை தூக்கி வீசினான், ஆனால் தாவீது மீது அது படவில்லை, அவன் விலகிவிட்டான். ஒருவேளை உங்களுடைய சத்துரு பிசாசாக இருக்கலாம். மனிதர்களே சத்துருக்களாக மாறலாம், ஒரு மனுஷனுக்கு சத்துரு அவன் வீட்டாரே என்று இயேசுவே கூறியிருக்கிறார். இயேசுவோடு 12 பேர் இருந்தார்கள். அதில் ஒருவனுக்குள் தான் பிசாசு இருந்தான். வெளியில் இருந்து யாரும் வரவில்லை. எனவேகர்த்தருடைய வார்த்தை சொல்கிறது, நீங்கள் அரணுக்கு திரும்பும் பொழுது சத்துருவிடமிருந்து கர்த்தர் பாதுகாப்பார். எல்லா அழிவிலிருந்தும் பாதுகாப்பார். எல்லாவற்றுக்கும் மேலாக நரக அக்கினியிலிருந்து உங்களை பாதுகாப்பார். இரண்டாம் மரணமாகிய கந்தகமும், நெருப்பும் எரிகின்ற இடத்திலிருந்து உங்களை பாதுகாப்பார். இந்த அரணுக்கு நேராக நீங்கள் திரும்பும் பொழுது அப்படிப்பட்ட அக்கினியில் நீங்கள் வேகாதபடிக்கு அவர் பூரணமாய் பாதுகாப்பார்.

- **தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையு மானவர் - சங்கீதம் 46: 1**
- **அநாதி தேவனே உனக்கு அடைக்கலம். அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம் - உபாகமம் 33: 27**

அநாதி தேவன் உங்களுக்கு அடைக்கலமாக இருக்கும்பொழுது நீங்கள் எதைக்குறித்தும் பயப்பட வேண்டிய அவசியமில்லை. எல்லாவற்றிலும் இருந்து நம்மை பாதுகாப்பார். இப்படிப்பட்ட ஒரு பாதுகாப்பு தான் எலிசாவிற்கு இருந்தது. அன்று கேயாசி கண்களுக்கு இரதங்கள் தெரியவில்லை. அதுதான் தெய்வீக பாதுகாப்பு. **சாதாரண மக்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்பு என்ற அரண் தெரியாது. ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படும் பொழுது அந்த பாதுகாப்பை நீங்கள் காண முடியும். அதனால்தான் எலிசா "கர்த்தாவே இவன் கண்களை கொஞ்சம் திறந்து விடுங்கள்" என்கிறான். அதன் பிறகே கேயாசியின்**

கண்கள் திறக்கப்பட்டது, எலிசாவை சுற்றிலுமிருந்த தெய்வீக பாதுகாப்பு அரண் அவனுக்கு தெரிந்தது. உலகத்தில் இருக்கிறவனை காட்டிலும் உங்களுக்குள் இருக்கின்ற இயேசு பெரியவர். அந்த பெரியவர் உங்களுக்குள் இருக்கும் பொழுது அந்த பாதுகாப்பை பெற்றுக்கொள்வீர்கள். **கர்த்தர் தமது ஜனத்துக்கு அடைக்கலமும் இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான கோட்டையுமாயிருப்பார். யோவேல் 3:16**

ஆம் அன்பான வாசகர்களே! இன்றைக்கு நீங்கள் நம்பிக்கை இல்லாதவர்களாக இருந்து விடாதீர்கள்! இனிமேல் என்ன செய்வது என கலங்கி நிற்காதீர்கள்! நம்பிக்கையுடைய சிறைகளாக நீங்கள் இருக்கும்பொழுது உங்களுக்கு நிச்சயம் விடுதலை உண்டு. அநேக பேர் **"மயிரிழையில் தப்பிவிட்டேன்"** என்று சொல்வார்கள். ஒரு நொடியில் காப்பாற்றப் பட்டேன் என்பார்கள். அது தான் தெய்வீக பாதுகாப்பு. இன்றே அரணுக்கு திரும்பி இந்த விலையேறப்பெற்ற தெய்வீக பாதுகாப்பை பெற்றுக்கொள்ளுங்கள்.

## 3. இரட்டிப்பான நன்மையை தருவேன் (I will restore double to you)

இந்த வசனத்தில் **"இரட்டிப்பான நன்மையை தருவேன்"** என்று எழுதப்பட்டுள்ளது. யாருக்கு இந்த இரட்டிப்பான நன்மையை தருவார்? அரணுக்குள் வராதவர்களுக்கு இரட்டிப்பான நன்மை என்பது வாய்ப்பே இல்லை. **அரணுக்குள் யார் யாரெல்லாம் வருகிறார்களோ அவர்களுக்கு மாத்திரமே இரட்டிப்பான நன்மை.** மற்றவர்கள் எல்லாம் பழைய நிலைமையிலேயே இருக்க வேண்டியதே! ஆங்கிலத்தில் **Restore** என்று எழுதப்பட்டுள்ளது. அதன் பொருள், **நீ எவற்றையெல்லாம் இழந்தாயோ அவற்றையெல்லாம் இரட்டிப்பாக திரும்ப பெறுவாய் என்பதே அர்த்தமாகும்.**

**சங்கீதம் 85:12ல் கர்த்தர் நன்மையானதைத் தருவார்** என்ற வாக்கின்படி நாம் அரணுக்குள் இருக்கும்பொழுது அவர் நன்மையானதையே தருவார். யோசேப்பு அன்றைக்கு **"நீங்கள் எனக்கு தீமை செய்தீர்கள், கர்த்தரோ அதை நன்மையாக மாற்றினார்"** என்று கூறினான். கர்த்தர் எப்போதும் நன்மையானதை தருகின்ற ஒரு தேவனாக இருக்கிறார். **அவர் வருஷத்தை நன்மையால் முடிசூட்டுகிறார். (சங்கீதம் 65:11) உம்முடைய பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம். (சங்.65:4b)**

ஆம். பிரியமானவர்களே! அவர் திருப்தியாக்கும் பொழுது அது முழு திருப்தியாக இருக்கும். **சங்கீதம் 119:68ல் "அவர் நல்லவரும், நன்மை செய்கிறவருமாய் இருக்கிறார்"** என்றும் **சங்கீதம் 34:10ல் "சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும், கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது" என்றும் நீதிமொழிகள் 11:23-ல் நீதிமான்களின் ஆசை நன்மை, நீதி. 13:21ல் நீதிமான்களுக்கோ நன்மை பலனாக வரும் என்று அழகாக சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வார்த்தைகளை எல்லாம் நாம் வாசிக்கும்பொழுது அவர் நல்லவர், நன்மை செய்கிறவர் என்பதை முழுமையாக அறிந்துகொள்ள முடிகிறது.**

அன்பான வாசகர்களே! இரண்டுவிதமான நன்மைகளை நாம் இங்கே தெரிந்துகொள்ள வேண்டும். அதுதான் இரட்டிப்பான நன்மையாகும். **ஆவிக்குரிய வாழ்க்கையிலும், உலகப் பிரகாரமான வாழ்க்கையிலும் நமக்கு இரட்டிப்பான நன்மையை தேவன் கொடுக்கிறார். இது தான் இரட்டிப்பான நன்மை என்பதாகும்.** ஒரு விசை இயேசு கிறிஸ்துவிடம் பேதுரு **"எல்லாவற்றையும் விட்டுவிட்டு உமக்கு பின்னால் வந்தோமே எங்களுக்கு என்ன கிடைக்கும்"** எனக் கேட்டான். அதற்கு இயேசு **"இம்மையிலே நூறத்தனையான பலனும், மறுமையிலே நித்திய ஜீவனும் கிடைக்கும்"** என்று கூறினார்.

ஆவிக்குரிய வாழ்க்கையில் நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்று யோசிக்கும் பொழுது ஒரு காலத்தில் ஜெப ஜீவியத்தில் நன்றாக இருந்திருப்பீர்கள், தற்பொழுது ஜெப ஜீவியமே இல்லாத ஒரு வாழ்க்கை வாழ்ந்துக் கொண்டிருக்கலாம். பழைய ஜெப ஜீவியம் மீண்டும் திரும்ப பெறவேண்டும் என்றால் நீங்கள் அவரது அரணுக்கு வர வேண்டும். ஒரு காலத்தில் நான் எப்படி ஜெபம் செய்தேன், வேதம் வாசித்தேன், அதை இன்றைக்கு விட்டுவிட்டேனே என்று சொல்லி தேவனிடம் அறிக்கை செய்து அவரது அரணுக்கு திரும்பும் பொழுது அவர் இரட்டிப்பான நன்மை அதாவது முன்பு ஒரு மணி நேரம் ஜெபித்தீர்களா? அதற்கு பதிலாக இரண்டு மணி நேரம் ஜெபிக்கும்படியான கிருபையை தருவார். ஒரு மணி நேரம் வேதம் வாசித்தீர்களா? அதற்கு பதிலாக இரண்டு மணி நேரம் வாசிக்கும்படி கால சூழ்நிலைகளை உங்களுக்கு அமைத்து நடத்துவார். உங்களை தாழ்த்தி நீங்கள் செய்தவற்றை ஒப்புக்கொண்டு மன்னிப்பு கேளுங்கள். அதுமாத்திரமல்ல, ஆவிக்குரிய கனிகளை, வரங்களை எனக்குத் தாரும் எனநீங்கள் கேட்கும்பொழுது நிச்சயமாக உங்களுக்குத் தருவார். அரணுக்கு திரும்பும் பொழுது அவர் நிச்சயம் உங்களை ஆசீர்வதிப்பார்.

ஆம் பிரியமான வாசகர்களே! **கர்த்தருக்காக செயல்படுவதில் இரட்டிப்பாக இருங்கள். ஆலயத்திற்கு செல்வதில், வேதவாசிப்பில், அவருக்கு கொடுப்பதில் முனைந்து இருங்கள். அப்பொழுது அவர் இரட்டிப்பான நன்மையை உங்களுக்கு தருவார்.** ஆவிக்குரிய பிரகாரமாக மாத்திரமல்ல, உலகப்பிரகாரமாகவும் உங்களை ஆசீர்வதிப்பதில் அவர் உண்மையுள்ளவராக இருக்கிறார். நீங்கள் உங்கள் பணத்தை, சொத்துக்களை, சுகத்தை, நல்ல பெயரை, செழிப்பை இழந்திருக்கலாம். நல்ல வாய்ப்புகளை இழந்திருக்கலாம். பரவாயில்லை! தேவனுடைய அரணுக்கு நீங்கள் திரும்பும்பொழுது அவர் இழந்தவற்றை இரட்டிப்பாக மீண்டும் உங்களுக்கு தருவார். உங்களை கர்த்தர் தூக்கி எடுத்து நிறுத்துவார். அது தான் அவர் செய்கின்ற காரியம். நீங்கள் அரணுக்கு திரும்ப வேண்டும் என்பதைத்தான் அவர் எதிர்பார்க்கின்றார்.

வேதத்தில் சில பக்தர்கள் எப்படி உலகப் பிரகாரமான ஆசீர்வாதத்தையும் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தையும் இரட்டிப்பாய் பெற்றுக்கொண்டார்கள் என்பதை குறித்து உங்களுக்கு விளக்க விரும்புகின்றேன்.

## a) உலக ஆசீர்வாதத்தை இரட்டிப்பாய் பெற்றுக் கொண்ட யோபு

முதலாவது **யோபு 1:1-3** வசனங்களை வாசிக்கும் பொழுது, ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் இருந்தான்; அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான். அவனுக்கு ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும் பிறந்தார்கள்.

அவனுக்கு எழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர்மாடுகளும், ஐந்நூறு கழுதைகளுமாகிய மிருகஜீவன்கள் இருந்ததுமன்றி, திரளான பணிவிடைக்காரரும் இருந்தார்கள்; அதனால் அந்த மனுஷன் கிழக்கத்திப் புத்திரர் எல்லாரிலும் பெரியவனாயிருந்தான் யோபு மிக வசதியாக, ஆசீர்வாத மாக வாழ்ந்தவன். ஆனால் திடீரென எல்லாவற்றையும் இழந்து விட்டான். **யோபு 13:15ல் அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்** என்று உறுதியாக கூறுகிறான். கட்டின மனைவியே அவனை தூஷித்து போய்விட்டாள். ஆனால் இவன் தைரியமாய் அரணுக்குள் இருந்தபடியால் பின்னால் என்ன நடக்கிறது என பாருங்கள்.

**யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார் - யோபு 42:10**-ன்படி இரண்டத்தனையாய் கொடுக்கின்றதை பார்க்கின்றோம். **யோபு 42:12ல் கர்த்தர் யோபின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார்;** பதினாலாயிரம் ஆடுகளும், ஆறாயிரம் ஒட்டகங்களும், ஆயிரம் ஏர்களும், ஆயிரம் கழுதைகளும் அவனுக்கு உண்டாயின என்று அவன் பெற்ற இரட்டிப்பான ஆசீர்வாதத்தை பற்றி விளக்கமாக எழுதப்பட்டுள்ளது. யோபுவின் குமாரத்திகள் போல அந்த தேசத்திலேயே சௌந்தரியமான பெண்கள் இல்லை என்று **யோபு 42:15ல்** ஆச்சரியப்படும் அளவில் எழுதப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் முக்கிய காரணம் யோபு தேவனுடைய பாதுகாப்பு அரணுக்குள் இருந்தான்.

## b) ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை இரட்டைத் தனையாய் பெற்றுக்கொண்ட எலிசா

அடுத்தது, **2 இராஜாக்கள் 2:9-15** வரையுள்ள வசனங்களை வாசிக்கும்பொழுது, அதில் எலியாவை கர்த்தர் எடுத்துக் கொள்ள பார்க்கிறார் என்பது அவனுக்கு நன்றாக தெரிந்துவிட்டது. அதற்கு முன்பு கர்த்தர் அவனை பெத்தேலுக்கு போ, எரிகோவிற்கு போ, யோர்தானுக்கு போ என்கிறார். எலியா எங்கே போனாலும் அவன் பின்னாலேயே எலிசாவும் போகிறான். இப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் எலியாவிற்கு மனதில் ஒன்று தோன்றிவிட்டது. இவன் மிகவும் நல்லவனாக இருக்கிறான். இவன் அரணையே சுற்றி சுற்றி வருகிறான், எங்கேயும் வெளியே போகவில்லை, எனவே, எலியா எலிசாவை நோக்கி: நான் உன்னைவிட்டு எடுத்துக்கொள்ளப்படுமுன்னே நான் உனக்குச் செய்யவேண்டியது என்ன கேள் என்றான். அதற்கு எலிசா: **உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன்** என்றான். அதற்கு அவன்: அரிதான காரியத்தைக் கேட்டாய்; உன்னைவிட்டு நான் எடுத்துக்கொள்ளப்படுகையில் என்னை நீ கண்டால் உனக்குக் கிடைக்கும்; இல்லாவிட்டால் கிடைக்காது என்கிறான். இதை சற்று உன்னிப்பாக வாசியுங்கள். எலியா எடுத்துக் கொள்ளப்படும்பொழுது அவன் அந்த இடத்தில் இருந்தால் தான் இரட்டிப்பான வரம் கிடைக்கும். இல்லையென்றால் கிடைக்காது. எலியா எடுத்துக் கொள்ளப்படும்பொழுது அதேபோல எலிசா பார்க்கிறான், மேலேயிருந்து விழுந்த எலியாவின் சால்வையை அவன் எடுத்துக்கொண்டு, எந்த யோர்தானை எலியா பிளந்தானோ அங்கே வந்து விட்டான். எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று சொல்லித் தண்ணீரை அடித்தான்; தண்ணீரை அடித்தவுடனே அது இருபக்கமாகப் பிரிந்ததினால் எலிசா இக்கரைப்பட்டான். எரிகோவில் பார்த்துக் கொண்டு நின்ற தீர்க்கதரிசிகளின் புத்திரர் அவனைக் கண்டவுடனே, எலியாவின் ஆவி எலிசாவின்மேல் இறங்கியிருக்கிறது என்று சொல்லி, அவனுக்கு எதிர்கொண்டுபோய்த் தரைமட்டும் குனிந்து அவனை வணங்கினார்கள். **எலியாவின் ஆவி, எலிசாவின் மேல் இரட்டிப்பாய் இறங்கியதாக மற்றவர்கள் அங்கே சாட்சி கூறுகிறதை நீங்கள் இங்கே கவனிக்க வேண்டும். இதுதான் ஆவிக்குரிய இரட்டிப்பான ஆசீர்வாதமாகும்.** எலியா உயிரோடு இருக்கும்பொழுதுதான் அற்புதம் நடந்தது. எலிசா மரித்த பிறகும் அவன் கல்லறையில் போட்ட பிணம்கூட உயிரோடு வந்தது. என்ன ஆச்சரியமான காரியம்! இவ்விதமாக எலிசா ஆவியின் வரத்தை இரட்டிப்பாய் பெற்றுக்கொண்டான்.

இந்த செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே, உங்கள் வாழ்க்கையில் பாவத்திலே அகப்பட்டு சிறைக்கைதிகளாக வாழ்கின்ற உங்களுக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது. அது தான் இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தம். நீங்கள் நம்பிக்கையோடு அரணாகிய இயேசுவினிடத்தில் திரும்பும்போது அவரே உங்களை பாவத்திலிருந்து விடுதலையாக்கி மகிமையான, சந்தோஷமான ஒரு வாழ்க்கையை கொடுக்கிறார். அதுமட்டுமல்லாது அவருடைய தெய்வீக பாதுகாப்பும் உங்களுக்கு கிடைக்கிறது. **இரட்டிப்பான நன்மையை தருவேன் என்று வாக்குக் கொடுத்தவர் என்றைக்கு நீங்கள் அரணுக்கு திரும்புவீர்களோ அன்றைக்கே உலகப் பிரகாரமான இரட்டிப்பான ஆசீர்வாதத்தினாலும் ஆவிக்குரிய இரட்டிப்பான ஆசீர்வாதத்தினாலும் உங்களை ஆசீர்வதிப்பார்.**

இத்தகைய பேராசீர்வாதங்களை பெற்றுக் கொள்வதற்கு இன்றைக்கே முழு நம்பிக்கையோடு இயேசுவாகிய அரணுக்கு நேராக வாருங்கள். அப்பொழுது நீங்கள் முன் இழந்த அனைத்து உலக ஆசீர்வாதங்களையும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் நிறைவாய் பெற்றுக்கொள்வீர்கள். தேவன் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!




## விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

**ஞாயிறு தோறும்**

**காலை 9.30 மணி – 11.30 மணி**

- ✓ அபிஷேகம் நிறைந்த பாடல்கள்
- ✓ அனல்மூட்டும் தேவ செய்தி
- ✓ உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்



ஜாதி, மத, இன வேறுபாடின்றி
அனைவரும் குடும்பமாக இவ்வாராதனையில்
பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10–வது குறுக்குத் தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி–18.

**Telugu Whats App No: 91770 87860**

**Tamil Whats App No: 95004 87059**

**உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.**

2 கொரிந்தியர் 9:7

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

**மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)**
**Online Donation (Website)**
**Bank Account / QR Code**
**UPI / Google pay / Paytm / Phonepe**

**இந்த QR code–ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.**

## வங்கிக் கணக்குகளின் விபரம்




| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| A/c no. 10848469699 | A/c no. 10848559426 | A/c no. 10848474869 |

**IFS Code: SBIN 0000930**
**State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

**காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக்கொள்ளுங்கள். (10.00 AM - 6.00 PM)**

## Cell no. 94888 45627, 80987 42638

**உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்.**

கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!

**அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்**
**10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.**

# மார்ச் மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

## பயப்படாதே!

மார்ச் 1 — ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன். (ஆதி. 15:1)

மார்ச் 2 — பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; (யாத்தி. 14:13)

மார்ச் 3 — அவர்களுக்குப் பயப்படாயாக; ... உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார். (உபா. 20:1)

மார்ச் 4 — அவர்கள் பயப்படாதபடிக்கு அவர்களைப் பத்திரமாய் வழிநடத்தினார். (சங். 78:53)

மார்ச் 5 — மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய். (லூக்கா 1:30)

மார்ச் 6 — பிரியமான புருஷனே, பயப்படாதே, உனக்குச் சமாதானமுண்டாவதாக. (தானி. 10:19)

மார்ச் 7 — பயப்படாதேயுங்கள், உங்கள் கைகள் திடப்படக்கடவது. (சகரியா 8:13)

மார்ச் 8 — பயப்படாதே, பிள்ளையிருக்கும் இடத்திலே தேவன் அவன் சத்தத்தைக் கேட்டார். (ஆதி. 21:17)

மார்ச் 9 — என் ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலைகொண்டிருப்பார்; பயப்படாதேயுங்கள். (ஆகாய் 2:5)

மார்ச் 10 — நீ படுக்கும்போது பயப்படாதிருப்பாய்; (நீதி. 3:24)

மார்ச் 11 — பயப்படாதே; நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று கர்த்தரும் இஸ்ரவேலின் பரிசுத்தருமாகிய உன் மீட்பர் உரைக்கிறார். (ஏசாயா 41:14)

மார்ச் 12 — மனுபுத்திரனே, நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; அவர்கள் வார்த்தைகளுக்கும் அஞ்சவேண்டாம்; (எசே. 2:6)

மார்ச் 13 — பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு... (மாற்கு 5:36)

மார்ச் 14 — பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; (லூக்கா 1:13)

மார்ச் 15 — பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள். (லூக்கா 12:7)

யுத்தங்களையும் கலகங்களையுங் குறித்து நீங்கள் கேள்விப்படும்போது, பயப்படாதிருங்கள்; (லூக்கா 21:9) மார்ச் 16

மார்ச் 17 இயேசு சீமோனை நோக்கி: பயப்படாதே, இது முதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். (லூக்கா 5:10)

நான் உம்மை நோக்கிக் கூப்பிட்ட நாளிலே நீர் அணுகி: பயப்படாதே என்றீர். (புலம்பல் 3:57) மார்ச் 18

மார்ச் 19 நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; ... நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; (ஏசா. 41:10)

இந்நாட்களில் எருசலேமுக்கும் யூதாவுக்கும் நன்மைசெய்யும்படித் திரும்ப நினைத்தேன்; பயப்படாதேயுங்கள். (சகரியா 8:15) மார்ச் 20

மார்ச் 21 நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்; (2 நாளா. 20:17)

நீ பயப்படாமலும் கலங்காமலும் இரு; தேவனாகிய கர்த்தர் என்னும் என் தேவன் உன்னோடே இருப்பார்; (1 நாளா. 28:20) மார்ச் 22

மார்ச் 23 இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய். (சங். 91:6)

... பாழாக்குதல் வரும்போதும் பயப்படாமலிருப்பீர். (யோபு 5:21) மார்ச் 24

மார்ச் 25 எனக்கு விரோதமாக ஒரு பாளயமிறங்கினாலும், என் இருதயம் பயப்படாது; (சங். 27:3)

பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம். (2 இராஜா. 6:16) மார்ச் 26

மார்ச் 27 உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது, ஆகையால் பயப்படாதிருங்கள். (லூக். 12:7)

பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப்பேர் சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன். (ஏசா. 43:1) மார்ச் 28

மார்ச் 29 உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக. (யோவான் 14:27)

என் தாசனாகிய யாக்கோபே, நான் தெரிந்துகொண்ட யெஷூரனே, பயப்படாதே, (ஏசா. 44:2) மார்ச் 30

மார்ச் 31 பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்; (வெளி. 1:17)



# Praise Report
# துதி அறிக்கை

## பொருத்தனை ஜெபத்தைக் கேட்டு தடைகளை நீக்கி வேலையை அருளிய கர்த்தர்!



என் பெயர் சந்திரபோஸ். நான் 2017-ம் ஆண்டு மே மாதம் 25-ம் தேதி வேலைக்காக துபாய் சென்றேன். அங்கு சென்று 2 மாதங்கள் வேலை கிடைக்காத சூழலில் இருந்தேன். அந்த நேரத்தில் என் அம்மாவிடம் என் சூழ்நிலையைச் சொன்னேன். உடனே **என் அம்மா அன்பரின் ஊழியத்திற்கு முதல் மாத சம்பளத்தை தருகிறேன் என நீ பொருத்தனை செய்து ஜெபி என்றார்கள். நானும் அவ்வாறே பொருத்தனை செய்து ஜெபித்தேன்.**

**அதன்பின் ஒரு சில நாட்களிலேயே எனக்கு வேலை கிடைக்க கர்த்தர் உதவி செய்தார். தற்பொழுது ஐந்து வருடங்களாக நான் சிவில் இன்ஜினீயராக துபாயில் வேலை பார்த்து வருகிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். என்னுடைய ஒரு மாத சம்பளத்தை அன்பரின் ஊழியத்திற்கு பொருத்தனை காணிக்கையாக தருகிறேன்.**

**- சகோ. சந்திர போஸ், கன்னியாகுமரி.**

## பொருத்தனை ஜெபத்தைக் கேட்ட தேவன்!

என் பெயர் மல்லிகா. நான் திருச்சியில் நடைபெறுகிற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு தொடர்ந்து வருகிறேன். **என் தங்கையின் மகனுக்கு திருமணத்திற்காக இதுவரை 30 பெண்களை பார்த்துவிட்டோம். ஒன்றும் அமையவில்லை. கடந்த ஆண்டு கூட்டத்திற்கு வந்த பொழுது தங்கை மகனுக்கு திருமணம் நடந்தால் சாட்சி சொல்வதாக பொருத்தனை செய்து, ஜெப விண்ணப்பத் திலும் எழுதிக் கொடுத்து சென்றேன். அதன் பின்னர் தேவ கிருபையால் ஒரு பெண் கிடைத்து மகனுடைய திருமணமும் ஆசீர்வாதமாக நடந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**



**என்னுடைய உடல் முழுவதும் வீக்கமாக இருந்தது. அதற்காகவும் தொலைபேசி வாயிலாக அன்பரின் ஊழியத்திற்கு தொடர்புக் கொண்டு ஜெபிக்கும்படி கேட்டேன். அத்துடன் நான் ஜெபிக்கும்பொழுது சகோதரர் ஆனந்த ஸ்திரா, சகோதரி மார்கிரேட் ஸ்திரா இருவரும் எனக்கு தரிசனத்தில் வந்தார்கள். கர்த்தர் சுகம் கொடுத்தார்.** இந்த இரண்டு காரியங்களுக்காகவும் கர்த்தரை மகிமைப்படுத்துகிறேன். சகோதரர் மற்றும் குடும்பத்தினருக்கு என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.

**- சகோதரி மல்லிகா மெர்ஸி, மயிலாடுதுறை.**

## 5 வருட பெலவீனம் மாறியது! அற்புத சுகம் பெற்றேன்!

என் பெயர் தேவி. 5 வருடமாக மாதவிடாய் நேரத்தில் நான் அதிக பெலவீனத்துடன் இருந்து வந்தேன். அந்த நேரத்தில் முதுகுவலியினாலும் இடுப்பு வலியினாலும் கஷ்டப்பட்டேன். நடக்கவும் முடியாது.



கடந்த நவம்பர் மாதம் நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்து **சகோதரர் ஆனந்த ஸ்திரா** அவர்களை சந்தித்து எனக்காக **ஜெபிக்கும்படி சொன்னேன். சகோதரரும் எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். தற்பொழுது எந்த ஒரு பெலவீனமும் இல்லாமல் நான் சுகமாய் இருக்கிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**

**- சகோதரி தேவி, கொல்லம்.**

## அற்புத சுகமும், அரசு வேலையும் கொடுத்த கர்த்தர்!

என் பெயர் பாக்கியலெட்சுமி. நாங்கள் அன்பரின் ஊழியத்தில் 15 வருடங்களாக பங்காளராக இருக்கிறோம். பல வருடங்களுக்கு முன்பாக எனக்கும் என் கணவருக்கும் இடையே



சமாதானம் இல்லாமல் இருந்தது. **கூட்டத்திற்கு வந்து ஜெபித்து சென்ற பிறகு கர்த்தர் எங்கள் இருவரிடையில் நல்ல சமாதானத்தை கொடுத்தார். இரண்டாவது ஒரு மகனும் பிறப்பதற்கு கர்த்தர் தயை செய்தார்.**

என் கணவர் அரசு பணிக்கான விரிவுரையாளர் தேர்வு எழுதியிருந்தார்கள். அவருக்கு வேலை இல்லாமல் கஷ்டமான சூழலில் இருந்தோம். **மூன்று மாதங்களுக்கு முன்பு திருச்சி குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு வந்திருந்தப் பொழுது சகோதரி Dr. ஜேன் ஜாஷ்வா அவர்களிடம் என் கணவருக்கு வேலை இல்லை. அதற்காக ஜெபிக்கும்படி சொன்னேன். அவர்கள் பாரத்துடன் ஜெபித்தது எங்களுக்கு ஆறுதலாக இருந்தது. ஜெபித்து சென்ற அந்த மாதமே என் கணவர் Merit-ல் பாஸ் செய்து அரசு பாலிடெக்னிக்கில் விரிவுரையாளர் பணியில் சேரும்படி கர்த்தர் உதவி செய்தார். அத்துடன் வேறு மாவட்டத்திற்கு செல்லாதபடி திருச்சியிலேயே சேதுராப்பட்டியில் Posting கிடைக்க கர்த்தர் இரங்கினார்.**

என் மூத்த மகன் பள்ளிக்கூடத்தில் இருந்தப்பொழுது இன்னொரு மாணவன் அவனை தள்ளிவிட்டான். அதனால் **என் மகனுடைய வலது கை உடைந்து மூட்டு நழுவிவிட்டது. கையை மடக்க முடியாமல் நீட்டிய வண்ணமே வைத்திருந்தான். ஒரு நாள் டெலிவரன்ஸ் சர்ச் ஆராதனைக்கு மகனை அழைத்து வந்து Rev.Dr.A. ஜாஷ்வா அவர்களிடம் மகனுக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். பாஸ்டர் மகனுக்காக பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். இப்பொழுது மகன் கையை நன்றாக மடக்குகிறான். சைக்கிள் ஓட்டும் அளவிற்கு கர்த்தர் பூரண சுகத்தை தந்தார்.**

இத்தனை அதிசயங்களை செய்த கர்த்தரை மனதார துதிக்கிறேன். எங்களுக்காக ஜெபித்த ஐயா குடும்பத்தினருக்கு எங்கள் நன்றியை தெரிவிக்கிறேன்.

**- சகோதரி பாக்கியலெட்சுமி பெருவ நல்லூர்.**

## 3 பேருக்கு வீட்டை கட்டிக்கொடுத்த கர்த்தர்!



என் பெயர் மரிய ஜெஸி விஜயா. 2021-ம் ஆண்டு ஜனவரி மாதம் திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு நான் வந்திருந்திருந்தப்பொழுது இரண்டு காரியங்களை ஜெபவிண்ணப்பத்தில் எழுதியிருந்தேன். ஒன்று கர்த்தர் எனக்கு சொந்த வீட்டை தரவேண்டும் எனவும், பக்கத்து வீட்டில் உள்ள சகோதரிக்கு கர்த்தர் குழந்தை பாக்கியத்தை தரவேண்டும் எனவும் எழுதியிருந்தேன்.

**வீட்டின் காரியத்தில் கர்த்தர் எங்களுக்கு மும்மடங்கு ஆசீர்வாதத்தை தந்தார். தேவ கிருபையால் நானும், என் அக்காவும், என் தம்பியும் வீடு கட்டி முடிக்க கர்த்தர் உதவி செய்தார். நான் எனக்கு மட்டும்**

**தான் எழுதியிருந்தேன். ஆனால் கர்த்தர் எங்கள் மூன்று பேருக்கும் வீடு கட்டி முடிக்க உதவி செய்தார்.**

**என் வீட்டின் அருகில் உள்ள சகோதரிக்கும் 7 வருடங்களுக்குப் பிறகு அழகான பெண் குழந்தை பிறக்க கர்த்தர் தயை செய்தார்.**

நான் அரியலூரில் உள்ள CBSE பள்ளியில் கணித ஆசிரியராக பணி செய்கிறேன். ஒவ்வொரு வருடமும் அரசு தேர்வு எழுதும் மாணவ மாணவியர்களின் பெயர் பட்டிலை அனுப்பி அவர்களுக்காக ஜெபிக்கும்படி சொல்வேன். அவ்வாறு **கடந்த ஆண்டு 3 பிள்ளைகள் கணித பாடத்தில் நூறு மதிப்பெண்கள் எடுக்கும்படி கர்த்தர் உதவி செய்தார். நல்ல தேர்ச்சியை கட்டளையிட்டார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**

**- சகோதரி மரிய ஜெஸி விஜயா, அரியலூர்.**

## பொல்லாத சத்துருவின் போராட்டத்திலிருந்து அற்புத விடுதலை!



என் பெயர் பரமேஸ்வரி கிருபா. மதுரையில் நடைபெறுகிற எல்லா கூட்டத்திற்கும் நாங்கள் தொடர்ந்து குடும்பமாய் வந்துக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு 3 வீடு உண்டு. அதில் 3-வது வீட்டில் நாங்கள் வசிக்கிறோம். இரவு நேரத்தில் வீட்டின் பின்புறத்தில் அனத்தல் சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கும். அதனால் இரவு நேரத்தில் வீட்டின் பின்புறத்தில் உள்ள பாத்ரூம் போய் வருவதற்கு எங்களுக்கு பயமாக இருக்கும். கடந்த வருடம் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்தபொழுது **சகோதரர் Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் அந்த சத்துருவின் போராட்டத்திற் காக ஜெபிக்கும் படி சொன்னேன்.

மறுநாள் நான் வீட்டில் ஜெபித்துக் கொண்டிருந்தப்பொழுது, தரினத்தில் **அந்த சத்தம் கேட்கிற இடத்தில் சகோதரர் நின்று கொண்டு, என்னை பெயர் சொல்லி கூப்பிட்டு, "நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்" என்று சொன்னார். அந்த நாளிலிருந்து வீட்டின் பின்புறத்தில் கேட்டு வந்த அனத்தல் சத்தம் இது வரை கேட்கவில்லை. எங்களுக்கு இருந்த பயமும் போயிற்று. இப்பொழுது சமாதானமாய் அங்கு இருக்கிறோம். என் மகனும், ஆனந்த ஸ்திரா ஐயா நம் வீட்டிற்கு வந்து ஜெபிக்கிறதை தரிசனத்தில் பார்த்தேன் என அடிக்கடி சொல்லிக் கொண்டு இருப்பான். அற்புதமாய் விடுதலைக்கொடுத்து எங்களை பாதுகாத்து வருகிற கர்த்தரை மனதார துதிக்கிறேன்.**

**- சகோதரி பரமேஸ்வரி கிருபா, மதுரை.**

**மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? 1 கொரி. 15:55**

## மரிக்கும் தருவாயிலிருந்த தாயையும், குழந்தையையும் பாதுகாத்து ஜீவனைத் தந்த தேவன்!



என்னுடைய மனைவி பெயர் பிரமிளா, அவள் கர்ப்பமாக இருக்கும் பொழுது இரத்தத்தின் அளவு மிகவும் குறைந்து இருந்தது. அவளும் கருவில் உள்ள குழந்தையும் மரிக்கும் தருவாயில் இருந்தனர். இதே நிலை நீடித்தால் தாயும் குழந்தையும் மரித்து விடுவார்கள் என மருத்துவர்கள் என்னிடம் கூறிவிட்டனர். அந்த நிலையில் எங்கள் பகுதியில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் வருவது குறித்து வால்போஸ்டரில் பார்த்து அக்கூட்டத் திற்கு என் மனைவியை அழைத்து வந்தேன். தனி ஜெப வேளையில் சகோதரர் எனது மனைவிக்காக ஜெபித்து **"நீ பயப்படாதே! நீயும் குழந்தையும் பிழைப்பீர்கள், கர்த்தர் இரத்த அளவை உயர்த்துவார்"** என்று கூறினார்கள். கர்த்தர் இரங்கி, சகோதரர் கூறியபடியே என் மனைவியின் இரத்த அளவை உயர்த்தினார். சில மாதங்களில் என் மனைவி நல்லதொரு ஆண் குழந்தையை பெற்றெடுத்தாள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திருமதி பிரமிளாவின் கணவர், ஐதராபாத்**

## கேன்ஸர் வியாதியிலிருந்து அற்புத சுகம் தந்த கர்த்தர்!



எனது தொண்டை பகுதியல் சிறுபிரச்சனை ஏற்பட்டது. மருத்துவரை அணுகிய பொழுது உணவு குழாய் முழுவதும் கேன்ஸர் நோய் பரவிவிட்டது என கூறினார்கள். இதற்கு சிகிச்சை அளிக்க முடியாது என்றும் சொல்லி விட்டார்கள். என்னால் பேசவே முடியாது, வெறும் சத்தம் மட்டும் தான் வரும். இதனால் என்னை நினைத்து என் குடும்பத்தார் மிகவும் கண்ணீர் வடித்தார்கள். நானும் நிம்மதியற்றவனாய் நாட்களை கழித்து வந்தேன்.

இந்த நிலையில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அவர்கள் கூறிய தேவ வார்த்தை என் மனதை மிகவும் தொட்டது. **முடிவில் எனது நிலையை பரிவுடன் கேட்டறிந்த சகோதரர் எனக்காக ஜெபித்தார்கள். தொடர்ந்து சகோதரனுடைய மூன்று கூட்டங்களில் கலந்து கொண்டேன். கர்த்தர் என்னை தொட்டார். எனக்கு பேச்சு வர ஆரம்பித்தது, உணவுகுழாய் பகுதியில் சுகம் ஏற்பட்டதை என்னால் உணர்ந்தேன். ஒருநாள் மருத்துவமனை சென்று மருத்துவர் ஆலோசனைபடி பரிசோதனைகள் செய்து பார்த்ததில் முழுவதுமாக கேன்ஸர் இல்லை என்று கூறினார்கள். இப்பொழுது என்னால் நன்றாக பேச முடிகின்றது. தேவனுடைய பாடல்களை பாடுகிறேன். ஊழியத்தை செய்து வருகிறேன். கர்த்தர் கொடுத்த அற்புத சுகத்திற்காக அவருக்கு ஸ்தோத்திரம்!**

**- திரு. ராஜாராவ், ஐதராபாத்**

## மரண ஆவியின் பிடியிலிருந்து அற்புத விடுதலை!



என் வீட்டிற்கு அருகில் இருந்த ஒரு நபர் கொடியவியாதியால் பாதிக்கப்பட்டு மரணத் தருவாயில் இருந்தார். வியாதியின் கொடுமை யால் எப்பொழுதும் கதறிக் கொண்டே இருப்பார். அவருடைய கூச்சல் சத்தம் எனக்கு அதிகமாக கேட்டது. அவ்வாறு சத்தமிட்டுக் கொண்டே அவர் இறந்து விட்டார். இதைப்பற்றி நான் நினைத்துக் கொண்டிருந்தப் பொழுது ஒரு மரண ஆவி என்னை தாக்கியது. அன்றிலிருந்து அந்த ஆவி என்னைஅதிக சித்ரவதைப்படுத்தியது. ஆந்திர மாநிலத்திலுள்ள எல்லா இடத்திற்கும் விடுதலைக் காக சென்றேன். விடுதலை கிடைக்காமல் தொடர்ந்து அதிகம் கஷ்டப்பட்டுக் கொண்டிருந் தேன். **கடைசியாக Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் கூட்டத்திற்கு வந்தேன். ஜெப வேளையில் கர்த்தர் தாமே அந்த தீயஆவியின் பிடியிலிருந்து விடுதலை தந்தார். இப்பொழுது நல்ல சுகமாக இருக்கின் றேன். கர்த்தருக்கே மகிமை!**

**- சகோதரி லதா, குண்டூர்**


**எமது You Tube சேனல்களை Subscribe செய்யவும்**



Ministry of Jesus - Dr. Ananda Stira



Dr Jane Joshua

My Deliverance Church

**எமது முகநூல் பக்கங்கள் (Face book)**

Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in

Ananda Stira @dranandastira

Margretstira

Jane Joshua @DrJaneJoshua

My Deliverance Church @mydeliverance.church

Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesrajstira

ministryofjesus.in

drjane15

Trichy

# WE ARE HIRING



- **Accountant**
  **(B.com. / M.com. Graduates)**
  *Skills Required : Tally ERP 9*
- **Data Entry Operators**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in computing skills*
- **Correspondence**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Typing & computing skills (Tamil, English, Telugu)*
- **Social Media Executive**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in social media platforms , Good in English & Tamil*
- **Video Editors**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Premiere Pro & After Effects*
- **Graphic Designers**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Photoshop & Illustrator*
- **Camera Man**
  **with adequate experience**
- **Drivers**
- **Cooks**
- **House Keepers**

- **Male / Female**
- **Christians Preferred**
- **Accommodation will be provided**
- **Apt Remuneration will be paid**

Apply to :

**info@mojindia.org**



# S J SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

- ஞானத்தைச் சம்பாதி, புத்தியையும் சம்பாதி; என் வாயின் வார்த்தைகளை மறவாமலும் விட்டு விலகாமலும் இரு.
- அதை விடாதே, அது உன்னைத் தற்காக்கும்; அதின்மேல் பிரியமாயிரு, அது உன்னைக் காத்துக் கொள்ளும்.
- ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி; என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக் கொள்.
- நீ அதை மேன்மைப்படுத்து, அது உன்னை மேன்மைப்படுத்தும்; நீ அதைத் தழுவிக் கொண்டால், அது உன்னைக் கனம்பண்ணும்.
- அது உன் தலைக்கு அலங்காரமான முடியைக் கொடுக்கும்; அது மகிமையான கிரீடத்தை உனக்குச் சூட்டும் - நீதிமொழிகள் 4:5-9

ஆம், எனக்கன்பானபங்காளர்களே!

நம்முடைய குடும்ப பின்னணி மற்றும் வாழ்க்கைச் சூழல் எப்படிவேண்டும் என்றாலும் இருக்கலாம். ஆனால் நமக்குக் கிடைக்கிற வசதி வாய்ப்புகளை வைத்து நாம் படிக்கும் பொழுது நாம் எல்லா விதத்திலும் முன்னேற முடியும்.

**எதை சம்பாதித்தாலும் ஞானத்தை சம்பாதி என்றும், ஞானமே முக்கியம் என்றும் பிரசங்கி கூறுகிறான். இந்த வார்த்தைகள் தான் எனது சிறுவயதில் ஆழமாக என்னை தொட்ட வசனங்கள்.** எனது இளம் வயதில் நான் படிக்க ஆசைப்பட்டும், கொடுமையான தண்டனைகளாலும், அடிகளாலும் என்னை காயப்படுத்தி நான் விரும்பிய மேற்படிப்பு எனக்கு தராதபடி பலவித காரணங்களை காண்பித்து எனது எதிர்காலத்தின் வளர்ச்சியை குன்றிப் போக செய்தவர்கள் என்னுடைய விடுதி காப்பாளர்கள். நன்கு படிக்கும் மாணவனாகிய என்னை இரண்டு ஆண்டுகள் வீணாக்கி கடுமையான தோட்ட வேலைகளில் மற்றும் குழி வெட்டும் வேலைகளுக்கும் ஈடுபடுத்தினார்கள்.

ஒரு உண்மையான தாய், தகப்பன் தன் பிள்ளைகள் நன்கு படிக்கவேண்டும் என்கிற ஆர்வத்தில், தன் பிள்ளைகளே சோர்ந்து போனாலும் அல்லது அறியாமையால் அல்லது நண்பர்களால் மோசம் போனாலும் அவர்களை கைவிடமாட்டார்கள். நல்லமுறையில் ஆலோசனை சொல்லி கண்டித்து தேற்றி எப்படியாவது அவர்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்றும், தங்களை விட அதிகமாக படிக்க வேண்டும், மேலான நிலைக்கு வரவேண்டும் என்று தான் விரும்புவார்கள். ஆனால் இந்த அன்பு எல்லாம் விடுதியில் வளர்ந்த எனக்கு ஒரு துளியும் கிடைக்கவில்லை. அதற்குப் பதிலாக கொடுமைகள் தான் கிடைத்தது. அதிகமாக படிக்கவேண்டும் என்ற ஆர்வம் இருந்தும், நான் அதற்குரிய தகுதியை பெற்றிருந்த போதிலும் மனச்சோர்வுற்று, எனக்கு பெற்றோர் இல்லை என்று தானே இப்படி என்னை கொடுமைப்படுத்துகிறார்கள் என்று பலமுறை தற்கொலைக்கு நேராய் ஓடினேன்.

ஆனால் தாயின் வயிற்றில் இருந்து என்னை தெரிந்து கொண்ட மிகுந்த கிருபையுள்ள இயேசு கிறிஸ்து எனக்குக் காட்சியளித்து **"மகனே! நீ கலங்காதே! விடுதி காப்பாளர்கள் உன்னை படிக்க வைக்காவிட்டாலும் நான் உன்னை படிக்க வைக்கிறேன். உன்னை அவர்கள் வெறும் ஒரு வருட டிப்ளமோ மட்டும் படிக்க வைத்து உன்னை சிறுமைப்படுத்தி விட்டார்கள். ஆனால் நீ என்னை நம்பு! எனக்கு பயப்படும் பயம் உனக்குள் எப்பொழுதும் இருக்கட்டும் அப்பொழுது நான் உன்னை உயர்த்துவேன்"** என்று நேரடியாக என்னிடம் கூறினார். அதுமாத்திரமல்ல, **என் கிருபை இருக்கும் வரைக்கும், பூமியில் நீ உயிரோடிருக்கும் வரைக்கும் எத்தனை வயதானாலும் நீ படித்துக் கொண்டே இருக்கலாம் என்று கூறினார்.**

வெறும் 50 ரூபாய் சம்பளத்தில் வாழ்க்கையை ஆரம்பித்த நான், தேவனின் அருளாலும், எனது கடும் முயற்சியினாலும் முன்னேற ஆரம்பித்தேன். தொடர்ந்து நல்லொழுக்கத்தோடு கருத்தாய் வளர்ந்தேன். இதன்